1990 ஏப்ரல் 18]

குறைந்த மழை பெய்தாலும், அந்தத் தண்ணீர் முழுவதும் அந்தப் பள்ளத்தின் வழியாக வருவது, அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. இப்படித் தேக்குவதன் மூலம் விவசாயிகளுடைய பண்ணைகள் அபிவிருத்தி செய்வதற்கும், ஊற்றுக்கள் அதிகரிப்பதற்கும் வசதி ஏற்படும். அத்தகைய திட்டத்திற்கும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். வரவேற்கிறேன். விரைவில் நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : சம்பார் வழிந்தோடாமல், சிலர் இட்லியால் தேக்குவதைப் போல, அந்தத் தண்ணீர் வழிந்தோடாமல் அந்த நீர்த்தேக்கம் கட்டப்படும் என்ற உறுதியை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

தண்ணீர் தேக்கம் மற்றும் வழங்கல்

* 6743 டாக்டர் எம். மோசஸ் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தண்ணீர் தேக்கம் மற்றும் வழங்கல் தொடர்பாக எல்லா மாவட்டங்களிலும் வேளாண்மை, குடிநீர், வடிகால், மண்ணியல், பொதுப்பணி முதலிய துறைகளில் அலுவலர்களையும், விவசாயிகள் பிரதிநிதிகளையும் சேர்ந்த குழு அமைத்து சீரான முறைகளைப் பின்பற்ற திட்டங்கள் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இல்லை.

சத்துணவுக் கூடங்களில் பணி புரிபவர்கள்.

* 2066 திரு. செங்கை சிவம் மற்றும்

திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுக் கூடங்களில் பணி புரிபவர்கள் தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களா?

(ஆ) இல்லையெனில், தகுதியின் அடிப்படையில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலெட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சத்துணவுக் கூடங்களில் பணிபுரிபவர்கள் அரசால் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில்தான் நியமிக்கப்படுகிறார்கள்.

[1990 ஏப்ரல் 18

திரு. செங்கை சிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் தகுதி இல்லாதவர்கள் சத்துணவுக் கூடங்களில் பணியாளர்களாக எத்தனை பேர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்? அவர்களை நமது ஆட்சிக் காலத்திலே பகுதி நேர நிரந்தரப் பணியாளர்களாக அமர்த்துகிற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது ஆகவே, அந்த அடிப்படையில் இனிமேல் நியமிக்கப்படுகிறவர்களுக்கு அப்படி வழிமுறை பின்பற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் நியமிக்கப்படுகின்ற அமைப்பாளர்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று. இரண்டு வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளைப் பராமரிக்கின்ற குழந்தைகள் நல அமைப்பாளர்கள். அவர்கள் கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி அல்லது புதிய 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று இருக்கவேண்டும். குழந்தைகளுக்கு முன் பருவக் கல்வி கற்றுத் தரக்கூடிய பயிற்சியும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 25 லிருந்து 35. விதவைகளுக்கு 40 வயது வரை சலுகை உண்டு. ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, நடுநிலைப்பள்ளிகளிலே செயல்படுகிற சத்துணவுக் கூடங்களில் பணியாற்றுகிற அமைப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு வேண்டிய கல்வித் தகுதி, எஸ்.எஸ்.எல்.சி. தேறிய மற்றும் தவறியவர்கள்; அல்லது புதிய 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர் அல்லது தவறியவர்கள். மலைப் பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளில் பணியாற்றுகிற சத்துணவு அமைப்பாளர்களுக்கு, கல்வித் தகுதி தளர்த்தப்பட்டு, 8 ஆம் வகுப்பு வரை அவர்கள் படித்திருந்தாலே போதும் என்று இந்த அரசு அறிவித்து இருக்கிறது. அதைப்போல அவர்களுக்கு வயது வரம்பு 25—லிருந்து 40—வரை என்று இருந்ததை, இப்போது 20 வயதிலிருந்து 40 வயது வரை அவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. மலைப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய சத்துணவுக் கூடங்களுக்கு 18 வயது நிரம்பிய 8 ஆம் வகுப்பு வரை படித்திருந்த பெண்களே போதும் என்று தற்போது நாம் வயது வரம்பு நிர்ணயித்திருக்கிறோம். கடந்த ஆட்சியிலும் இந்த முறைதான் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. ஏதாவது சத்துணவுக் கூடங்களில் இந்த வயது மற்றும் கல்வி வரம்பிற்கு உட்படாமல் தகுதியற்றவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்கட்டுவார்களேயானால், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-55 மணி

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு பணியாளர்களில் பகுதி நேர ஊழியர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்பட்டு அவர்களுக்கு ஓரளவு ஊதியம் உயர்த்தித் தந்து கல்விக் கூடங்களில் கல்வி கற்பிக்கின்ற பணியை அவர்களுக்கு நிரந்தரமாகத் தருகின்ற திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.